2017 ஜூன் 23]

76—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***5545—திரு. மு. கோதண்டபாணி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, மாமல்லபுரத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி, மாமல்லபுரத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கோதண்டபாணி அவர்கள்.*

திரு. மு. கோதண்டபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு எனது பணிவான காலை வணக்கத்தை உரித்தாக்கிக்கொள்கிறேன். தமிழக மக்களினுடைய இதயங்களிலும், இல்லங்களிலும் நீக்கமற என்றும் நிறைந்திருக்கின்ற எட்டாம் வள்ளலாகத் திகழ்ந்து; வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்களுக்கும் திட்டங்களையெல்லாம் வாரி வழங்கி; எதிரிகளின் சிம்ம சொப்பனமாகவும்; ஆறாவது முறையாக தமிழக சிம்மாசனத்தை அலங்கரித்தும்; மறைந்தும், மறையாமல் வாழ்ந்துகொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பாதங்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் சிறப்பான முறையில் நல்லாட்சி நடத்தி வருகின்ற, அம்மாவினுடைய தனயனாக இருந்து ஆட்சியினைச் சிறப்பான முறையில் நடத்தி வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாமல்லபுரத்தில் Engineering College மற்றும் சிற்பக் கலை கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால், அந்தப் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, அதாவது அரசு polytechnic இதுவரை ஒன்றும் இல்லை. இந்த மாவட்டத்தில் நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்த ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கின்ற காரணத்தால், அவர்களின் குடும்பங்கள் உயர் நிலைக்குச் செல்வதற்கு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினை மாமல்லபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பூஞ்சேரி என்ற கிராமத்தில் அமைத்துக் கொடுத்தால், அது ஏழையெளிய குடும்பங்களின் வளர்ச்சிக்குச் சிறப்பாக அமையும் என்பதால், அதை அமைத்துக் கொடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஓர் அரசு நிதி உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும், 21 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே, 2015-2016 ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட சேர்க்கை இடத்தில் 4,807 இடங்கள் காலியாக உள்ளன. 2016-2017 ஆம் ஆண்டு 4,832 இடங்கள் காலியாக உள்ளன. ஒட்டுமொத்தமாக இரண்டு ஆண்டுக் காலத்தில் ஒப்பளிக்கப்பட்ட 19,052 இடங்களில் 9,413 இடங்களுக்கு மட்டும் மாணவர்கள் சேர்க்கை நடைபெற்று, மீதமுள்ள 9,639 இடங்கள் மாணவர்கள் சேர்க்கை இல்லாமல் காலியாக உள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாமல்லபுரத்தில் ஒரு புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்குத் தேவை எழவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அவசியம் தேவை, அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளார்கள். மாண்புமிகு அம்மாவினுடைய வழியில் தொடரும் இந்த அரசு தேவைக்கேற்ப ஆராய்ந்து இதனைப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கோதண்டபாணி அவர்கள் .

திரு. மு. கோதண்டபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிறப்பான ஆட்சியில், பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறைகளுக்கு ஏறத்தாழ 33 ஆயிரம் கோடி ரூபாய் வாரி வழங்கப்பட்டு உள்ளது.

முற்பகல் 10-45

ஏழையெளிய மக்கள் வாழ்கின்ற மாவட்டமாக இருக்கின்ற காரணத்தாலும், அந்த மாவட்டத்திலுள்ள ஏழையெளிய மக்களுக்கு, அரசு நடத்துகின்ற polytechnic இல்லாத காரணத்தாலும் Engineering College அல்லது I.T.I-ல் சேர வேண்டுமென்று சொன்னால், நீண்ட நெடுந்தூரம் பயணம் செய்து, செங்கல்பட்டு அல்லது சென்னைக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்வதற்கு வாய்ப்பு குறைவாக இருக்கின்ற காரணத்தினால், தொழிலை பயின்றால்தான் அவர்களுடைய வாழ்க்கையில் உடனடி வேலைவாய்ப்பு கிடைக்கும் என்கின்ற காரணத்தினால், பலவகை தொழில்நுட்பக் கல்லூரியினை இந்தப் பகுதிக்கு வழங்கினால் ஏழையெளிய, நடுத்தர குடிமக்களுக்கு உதவியாக இருக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது செயல் தலைவர் அவர்களை வணங்கி, கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குச் செல்வதற்கு நத்தத்திலிருந்து திண்டுக்கல் செல்ல வேண்டும் அல்லது பழனிக்குச் செல்ல வேண்டும் அல்லது மேலூருக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. சுமார் 40 கி.மீ. தொலைவில்தான் கல்லூரி இருக்கின்றது. ஆகவே, நத்தத்தில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற முறை சட்டமன்றத்தில் நான் கேள்வி கேட்டபோது, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஆதாரத்தின்படி நத்தத்தில் கல்லூரி அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்குத் தேவையான நிதி மற்றும் இடத்தினை

நாங்கள் தருகிறோம். எனவே, அப்பகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நத்தம் சட்டமன்றத் தொகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். கடந்த 6 ஆண்டு காலத்தில் பார்க்கும்போது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளையும் தேவைக்கேற்ப, தேவைக்கேற்ற பகுதிகளிலே தொடங்கி, மாணவர்களின் சேர்க்கை சதவிகிதத்தினை உயர்த்தும் அளவில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டம், நத்தம் சட்டமன்றத் தொகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மாணவர்களின் சேர்க்கை அடிப்படையில், அருகில் இருக்கக்கூடிய கல்லூரிகளில் கூடுதல் சேர்க்கை சதவிகிதத்தை அறிவித்து, அதன்மூலம் இன்றைக்கு கூடுதலாக 20 சதவிகிதம் மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் நிலையை அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது. வரக்கூடிய காலகட்டங்களில் அந்தப் பகுதியில் இதற்குமேலும் அதிகமாக விண்ணப்பங்கள் பெறப்பட்டிருப்பின் ஆய்வு செய்து அந்தப் பகுதியின் தேவைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்ற முறை கேட்டபோது, நிதி ஆதாரம் இல்லை என்று சொல்லியிருந்தீர்கள். இந்த முறை எங்களது உறுப்பினர் நிதி ஆதாரத்திற்கும் தயார், இடத்திற்கும் தயார், கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்கப்படுமா என்று கேட்கிறார். இதற்கு நேரடியான பதில் சொல்ல வேண்டும்;

2017 ஜூன் 23]

*ஆரம்பிக்கப்படும் அல்லது ஆரம்பிக்கப்படாது என்று. நிதி கொடுத்தும், இடம் கொடுத்தும் நீங்கள் ஆரம்பிக்கப்படாது என்று சொன்னால், ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, குற்றச்சாட்டு வேண்டாம். (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. துரைமுருகன்: *நீங்கள் அதற்கு நேரடியாகப் பதில் சொல்ல வேண்டுமே தவிர, அங்கு அவ்வளவு சேர்த்துப் பார்க்கிறோம், இங்கு சேர்த்துப் பார்க்கிறோம், இருந்தால் சேர்க்கிறோம் என்று இருக்கக் கூடாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியான பதிலை நான் அமைச்சர் அவர்களிடத்தில் எதிர்பார்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு அந்தக் கல்லூரி அமைக்கப்பட்ட பிறகு அங்கு ஒரு கட்டடம் தேவை என்றால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தரலாம். ஆனால், அவர் என்ன கேட்கிறார், அரசு என்ன சொல்லிக்கொண்டிருக்கின்றது என்பதை யோசிக்காமலேயே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கிறார். ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டும் என்று சொன்னால், ரூ.9 கோடியே 22 இலட்சம் தேவை. அந்த ரூ.9 கோடியே 22 இலட்சம் தொகையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படிச் செலவழிக்க முடியும்? அரசு, இடத்தை வேண்டுமானால் தேர்வு செய்து கொடுக்கலாம். கிராமப் பகுதி என்றால் 5 ஏக்கர் நிலம் தேவை. நகராட்சிப் பகுதி என்றால் 3 ஏக்கர் நிலம் தேவை. மாநகராட்சிப் பகுதி என்றால் 2 ஏக்கர் நிலம் தேவை. அப்படியிருக்கின்ற சூழ்நிலையில் அரசு கோரும் 5 ஏக்கர் நிலத்தை அவர் ஒதுக்கித் தரலாம். ரூ.9 கோடியே 22 இலட்சம் ரூபாயில், கட்டடம் கட்டுவதற்கு மட்டும் 7 கோடியே 22 இலட்சம் தேவை. மீதத் தொகை தொடர் செலவினம். அந்தத் தொடர் செலவினத்தை அவர் செலவழிக்க முடியுமா? (குறுக்கீடு)*

திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *அதையெல்லாம் செலவழிக்க முடியாது. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், நத்தம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம், அந்தப் பகுதியில் சேர்க்கை சதவிகிதம் கூடுதலாக இருந்தால்தான், கல்லூரி தேவைப்படும். கூடுதல் சதவிகிதம் இல்லையென்றால் அங்கு புதிய கல்லூரி தொடங்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, அந்த மாவட்டம் குறித்து முழுமையாக ஆய்வு செய்யப்படும். தொடர் செலவினம், தொடராச் செலவினத்தையெல்லாம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செய்ய முடியாது. ஆகவே, அதையெல்லாம் அரசு பரிசீலனை செய்துதான் ஒரு கல்லூரியைத் தொடங்க முடியும். சென்ற 6 ஆண்டு காலங்களில் 45 கல்லூரிகளை, அதாவது 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை, 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளைத் தொடங்கிய புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் அரசில் எங்கெங்கு மாணவர்கள் சேர்க்கை கூடுதலாக இருக்கிறதோ, அங்கெல்லாம் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, உறுப்பினரது கோரிக்கையை அரசானது பரிசீலிக்கும் என்பதை மீண்டும் ஒரு முறை சொல்லி, அமர்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறபொழுது ** என்று ஒரு வார்த்தை சொன்னார்கள். அதை ** என்று மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அது நீக்கப்படுகிறது. காலையில் வந்தவுடன் கொஞ்சம் tension ஆகிவிட்டார், விடுங்கள்.

வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

77—

நேரடி நெல் கொள்முதல் நிலையம்

***2225—திரு. எஸ். ஆஸ்டின்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.